*19*

# கீழ்ப்படிதலுக்குப் பதிலி இல்லை

## [மத்தேயு 7:21-8:1]

*நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம், நமது இரட்சிப்பை நாமே ஈட்டிக்கொள்ள இயலாது என்று வேதாகமம் போதிக்கிறது (காண்க எபேசியர் 2:8, 9). அதே வேளையில், தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருப்பவர்களுக்கு மாத்திரமே அவருடைய கிருபை அளிக்கப்படுகிறது என்றும் வேதாகமம் போதிக்கிறது. இயேசு, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" என்று எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் ஆசிரியர் எழுதினார் (எபிரெயர் 5:9). இயேசு, "குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்று கூறினார் (யோவான் 3:36ஆ;* NASB*). நமது விசுவாசத்தை கீழ்ப்படிதலினால் நாம் வெளிப்படுத்துகிறோம் (காண்க யாக்கோபு 2:14-26). மற்றும் கீழ்ப்படிதலினால் நமது அன்பை நாம் வெளிப்படுத்துகிறோம் (காண்க யோவான் 14:15). கீழ்ப்படிதலினால் நமது உண்மையான ஞானத்தையும் நாம் வெளிப்படுத்துகிறோம் என்று நமது வேதபாட வசனப்பகுதி அறிவிக்கிறது. இயேசு கூறுவதைக் கேட்டு அதன்படி செய்கிறவரே ஞானமுள்ள தனிநபராக இருக்கிறார் (மத்தேயு 7:24). கீழ்ப்படிதலுக்குப் பதிலி ஒன்றும் இல்லை.*

## *வார்த்தைகள் பதிலி இல்லை (7:21-23)*

### *கொள்கை (வசனம் 21)*

21 முதல் 23வரையிலான வசனங்களில், கீழ்ப்படிதலுக்கு *வார்த்தைகள்* பதிலியாக இருப்பதில்லை என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். நமது வேதபாட வசனப்பகுதி, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (வசனம் 21) என்ற இயேசுவின் கூற்றுடன் தொடங்குகிறது. ஒருசில வசனங்களுக்கு முன்னர் இயேசு, இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசித்தல் பற்றிக் குறிப்பிட்டார். இங்கு அவர், இராஜ்யத்திற்குள் பிரவேசித்தல் பற்றிப் பேசினார். நாம் இடுக்கமான வாசல் வழியாக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். நாம் எவ்வாறு அந்த வாசல் வழியாகச் சென்று இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்? நாம் *பரலோகத்தில்* இருக்கிற தேவனுடைய சித்தத்தின்படி செய்வதினால் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

இயேசுவின் பிரசங்கத்தில் இதுவரையிலும், "இராஜ்யம்" என்ற சொற்றொடர், யூதர்கள் முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்த மேசியாத்துவ இராஜ்யத்தையே முதன்மையாகக் குறிப்பிட்டது. இந்த இராஜ்யத்தின் வாக்குத்தத்தம் சபை

நிலைநாட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.[1] பிதாவினுடைய சித்தத்தின்படி செய்யாமல் எவரொருவரும் சபையின் உறுப்பினராக இயலாது என்பது நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து ஏற்படுத்தப் படக்கூடிய மதிப்புள்ள ஒரு கருத்தாக உள்ளது.[2] இருப்பினும், பிரசங்கம் முடிவுக்கு வருகையில் இயேசு, நியாயத்தீர்ப்பின் நாளை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பினார் (காண்க வசனங்கள் 22, 23). ஆகவே 21ம் வசனத்தில் இயேசு அனேகமாக, *பரலோக* இராஜ்யத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். தேவனுடைய சித்தத்தின்படி செய்யாமல் எவரொருவரும் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

இயேசு ஏற்படுத்திய கருத்திற்கு நாம் திரும்பவும் செல்வோமாக: வார்த்தைகள் கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை. அவரைச் சிலர், "கர்த்தாவே" என்று அழைத்தனர். "கர்த்தாவே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kurios* என்ற) வார்த்தை இவ்விடத்தில் தெய்வீகக் குறிப்புப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[3] தொடக்கால விசுவாச அறிக்கையொன்று "இயேசுவைக் கர்த்தரென்று சொல்லுதல்" என்பதாக இருந்தது (காண்க 1 கொரிந்தியர் 12:3). நமது வேதபாட வசனப் பகுதியில் இயேசுவினால் குறிப்பிடப்பட்டவர்கள் அவரை "கர்த்தாவே!" என்று மாத்திரம் அழைப்பவர்களாக இருக்கவில்லை, ஆனால் அந்த இயற்பெயரை - "கர்த்தாவே!" "கர்த்தாவே!" என்று - திரும்பத் திரும்பக் கூறுபவர்களாக இருந்தனர், இது வைராக்கியத்தையும் ஊக்கத்தையும் சுட்டிக்காண்பிக்கிறது. இவை யாவையும் பாராட்டப்படத் தக்கதாகவே உள்ளது, ஆனால் இயேசுவை "கர்த்தாவே!" என்று அழைத்தல் என்பது கர்த்தர் என்ற வகையில் இயேசுவுக்கு முழு இருதயத்தோடும் கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக ஒருக்காலும் இருக்க இயலாது. அசுத்த ஆவிகள் இயேசுவை "தேவனுடைய பரிசுத்தர்" என்று ஒப்புக்கொண்டன (மாற்கு 1:24; காண்க யாக்கோபு 2:19); ஆனால் அந்த அறிக்கையை ஏற்படுத்திய பின்னரும் அவைகள் இன்னமும் அசுத்த ஆவிகளாகவே இருந்தன.

இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிடுகிறவர்கள், தேவனுடைய கட்டளைகள் யாவற்றையும் கடைப்பிடிக்கத் தங்களை ஒப்புக்கொடுத்தல் அவசியமாக உள்ளது. அடுத்த பகுதியில் (வசனங்கள் 24-27), இயேசுவினால் பேசப்பட்ட வார்த்தைகள், தேவனுடைய சித்தம் என்ற வகையில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது (காண்க யோவான் 8:28; 12:49, 50). நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனும் இயேசுவும் விரும்புகிறார்களோ, அதைச் செய்வதற்கு நாம் நமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். லூக்கா சுவிசேஷத்தில் உள்ள இணைவசனப் பகுதியில் இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" என்று கேட்டார் (லூக்கா 6:46).

நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதைப் பற்றிப் பேசும்போது, பூரணமான கீழ்ப்படிதலைப் பற்றி நாம் பேசுவதில்லை. எந்தத் தனிநபரும் அதைச் செய்யக்கூடியவராக இருப்பதில்லை (காண்க 1 யோவான் 1:8). இந்தப் படிப்புகள் முழுவதிலும் நான், மலைப்பிரசங்கத்தின் உயரிய கொள்கைகளில் எனது சொந்தக் குறைவுகள் பற்றி அறிக்கையிட்டுள்ளேன். எனவே தேவனுடைய சித்தத்தைச் செய்வதைப் பற்றி நாம் பேசுகையில் நமது சிந்தையில் கொண்டுள்ளது என்ன? செயல்படுதலின் விஷயத்தில் போலவே கீழ்ப்படிதலின் விஷயத்திலும்

எண்ணப்போக்கே அதிகம் பொருட்படுத்தப் படக்கூடிய விஷயமாக உள்ளது. நாம், "ஒரு விஷயத்தைத் தேவன் செய்யும்படி கூறுகிறார் என்றால், அதுவே நான் செய்ய விரும்பும் விஷயமாக உள்ளது!" என்று கூறக்கூடிய எண்ணப்போக்கு தேவைப்படுபவர்களாக இருக்கிறோம். நமது மிகச்சிறந்த திறனைக் கொண்டு தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை ஒப்புக்கொடுப்பவர்களாக நாம் இருத்தல் அவசியமாகிறது. J. W. மெர்கார்வீ அவர்கள், "நமது அன்றாட பாவத்திற்கான மன்னிப்பின் நிபந்தனைகளுடன் அன்றாடம் உடன்படுதலுடன் இணைந்த [காண்க மத்தேயு 6:12; நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9], மாம்சத்தின் பலவீனத்தின் மத்தியில் நமக்குச் சாத்தியமான அளவுக்குக் கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே தேவனுடைய தயவைப் பெற்றுக்கொண்டுள்ளது" என்று எழுதினார்.[4]

***நியாயத்தீர்ப்பின் காட்சி (வசனங்கள் 22, 23)***

இந்த வகையான ஒப்புக்கொடுத்தலில் குறைவுபடுகிறவர்கள் பற்றிய விஷயம் என்ன? D. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், "இந்த உலகத்தில் உரைக்கப்பட்டவற்றிலேயே ... மிகவும் புனிதமான வார்த்தைகள்"[5] என்று அழைத்த வார்த்தைகளிடத்திற்கு நாம் வருகிறோம்: 22 மற்றும் 23ம் வசனங்களில் உள்ள வார்த்தைகள். எனக்கு அவைகள், பேசப்பட்டவற்றிலேயே மிகவும் கவலையான வார்த்தைகளாக உள்ளன.

இந்தப் பகுதி, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி" என்று தொடங்குகிறது (வசனம் 22அ). "அந்நாளில்" என்பது கிறிஸ்து திரும்பவந்து எல்லாரும் நியாயந்தீர்க்கப்பட இருக்கும் நாளைக் குறிக்கிறது (காண்க 2 தெசலோனிக்கேயர் 1:7-10; 2 தீமோத்தேயு 1:12; 4:8). இயேசு, "அந்நாளில் *அநேகர்* என்னை நோக்கி" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). "அநேகர்" கேட்டுக்குச் செல்லும் விசாலமான வழியில் இருக்கின்றனர் (மத்தேயு 7:13); ஏறக்குறைய எல்லாரும் இப்படி இருக்கிறார்கள் என்பதை அறியாதிருக்கிறார்கள் என்பது பரிதாபத்திற்குரியது. இதன் விளைவாக, நியாயத்தீர்ப்பின் நாளில், கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று "அநேகர்" வலியுறுத்துவார்கள்.

இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள்: "அந்நாளில் அநேகர் *என்னை* நோக்கி ... என்பார்கள்" (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). நியாயத்தீர்ப்புக்காக நாம் அரியணை முன் நிற்கும்போது, அங்கு இயேசு அமர்ந்திருப்பார், இயேசுவே நமது முடிவைத் தீர்மானம் செய்பவராக இருப்பார். பிற்பாடு அவர் பின்வருமாறு கூறினார்:

> அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார் (மத்தேயு 25:31-33).

*அந்த வேளையில் இயேசு, மலைப்பகுதியில் அமர்ந்திருந்தார்; ஆனால் ஒருநாளிலே அவர் தமது அரியணையில் வீற்றிருப்பார். நமது வேதபாட வசனப்பகுதியில், அவரது உரையைக் கேட்டுக் கொண்டு இருந்தவர்கள், அவரையும் அவரது போதனையையும் ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை முடிவு செய்து கொண்டிருந்தனர், ஆனால் "அந்நாளில்" அவர்களை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை அவர் முடிவு செய்வார்.*

*தொடர்ந்து இயேசு, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்" என்று கூறினார் (வசனம் 22). இது, இயேசுவின் ஊழியத்துடன் தொடங்கி அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கைகளை வைத்தவர்கள் ஆகியோரின் வாழ்வுக்காலங்கள் முழுவதிலும் நீடித்திருந்த, அற்புதங்களின் காலத்தின்போது பேசப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் மக்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர் (தேவனுக்காகப் பேசினர்), மக்களிடமிருந்து அசுத்த ஆவிகளைத் துரத்தினர் மற்றும் பிற அற்புத வரங்களையும் செயல்விளக்கப்படுத்தினர் (காண்க மாற்கு 16:17, 18; நடபடிகள் 2:43; 13:1).*

*இயேசுவினால் சித்தரிக்கப்பட்ட தனிநபர்கள் உண்மையாகவே இந்தச் செயல்களைச் செய்தனரா? அவர்கள் இயேசுவின் காலத்திலும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் வாழ்ந்திருந்தனர் என்றால், அவர்கள் அவற்றைச் செய்திருக்கச் சாத்தியம் உள்ளது. எடுத்துக்காட்டாக, யூதாஸ் என்பவர் மலைப்பகுதியில் இயேசு கூறியவற்றைக் கவனித்தவர்களில் ஒருவனாக இருந்தான். மற்ற அப்போஸ்தலர்களுக்கு அருளப்பட்டது போலவே யூதாஸுக்கும் அற்புதங்களை நிகழ்த்தும் திறன் அருளப்பட்டிருந்தது (காண்க மத்தேயு 10:1-4). மேலும், அப்போஸ்தலர்கள் அற்புத வரங்களைக் கொடுக்கும்படி யாரேனும் ஒருவர் மீது தங்கள் கைகளை வைத்ததையும் (காண்க நடபடிகள் 8:18) அந்த தனிநபர் பிற்பாடு கர்த்தருக்கு உண்மையற்றுப் போனதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. தீர்க்கதரிசன வரத்தை உடையவர்களாக இருந்தும் அன்பில் குறைவுபடச் சாத்தியம் இருந்தது என்று பவுல் 1 கொரிந்தியர் 13ல் சுட்டிக்காண்பித்தார் (வசனம் 2).*

*அற்புதங்களைச் செய்யும் வரம் என்பது தன்னில் தானே, ஒருவர் தேவனைப் பிரியப்படுத்துகிறார் என்பதற்கு வழக்கிட இயலாத நிருபணமாக ஒருக்காலும் இருந்ததில்லை. பழைய ஏற்பாட்டில் தேவன், பாலாமிடத்தில் பேசி அவரது வாயில் வார்த்தைகளை இட்டார் (காண்க எண்ணாகமம் 22:9, 35, 38), ஆனால் பாலாம் "அவன் அநீதத்தின் கூலியை விரும்பினவன்" என்று கண்டனம் பண்ணப்பட்டார் (2 பேதுரு 2:15). புதிய ஏற்பாட்டில் பவுல், கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் எந்த அற்புத வரத்திலும் குறைவுபட்டிருக்கவில்லை (காண்க 1 கொரிந்தியர் 1:7; 12:1, 4-11), இருப்பினும் அந்த நகரத்தில் இருந்த சபைக்குழுமம் ஆவிக்குரிய பிரச்சனைகளின் பரவலான அளவினால் நோய் கொண்டிருந்தது என்று கூறினார்.*

*மத்தேயு 7:22ன் தனிநபர்கள், தாங்கள் அற்புதங்களை நிகழ்த்தி இருந்ததாக நினைக்கும்படி சாத்தானால் வஞ்சிக்கப்பட்டிருக்கவும் சாத்தியம் உண்டு. முன்னரே நாம் குறிப்பிட்டபடி, "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி ..."*

என்று இயேசு கூறினார் (மத்தேயு 24:11). பவுல், “அக்கிரமக்காரன்” பற்றிப் பவுல் பேசியபோது, அவனது வருகை “சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமை யோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்” இருக்கும் என்று அவர் கூறினார் (2 தெசலோனிக்கேயர் 2:9). சிலர் அற்புத வரங்களைக் கொண்டிருப்பதாக வஞ்சிக்கப்படலாம் என்பது பற்றி லியோ போல்ஸ் அவர்கள் “மக்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து, வஞ்சிக்கப்பட்டவர்களாக மரித்து, வஞ்சிக்கப்பட்டவர்களாகத் தேவனுக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படுவதற்கு வருவார்கள்” என்று எழுதினார்.[6]

நமது வேதபாட வசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள் ஒருவேளை, தாங்கள் அதைச் செய்துள்ளதாக உரிமைகோரியுள்ளதைச் செய்திருக்கலாம் அல்லது ஒருவேளை அவர்கள் அதை செய்யாது இருக்கலாம். எந்த வகையிலும் அவர்கள், இயேசுவின் நாமத்தினால் பல அற்புதமான செயல்களைச் செய்திருந்ததாகவும் இது அவர்கள் விசேஷமாக நடத்தப்படத் தகுதியாக்கிற்று என்றும் நினைத்தனர் என்பது தெளிவு. தான் எவ்வளவு பெரியவன் என்று தேவனிடம் கூறிய பரிசேயனின் பின்வரும் வார்த்தைகள், அவர்கள் (பரிசேயர்கள்) எவ்வளவு அகந்தை கொண்டிருந்தனர் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது: “தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன்” (லூக்கா 18:11, 12).

நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு நாம், நியாயத்தீர்ப்பின் நாளில் கர்த்தரிடத்தில், “கர்த்தாவே, நான் சபை ஆராதனை ஊழியங்கள் யாவற்றிலும் கலந்து கொள்ளவில்லையா? நல்ல ஒழுக்கமான வாழ்க்கை வாழவில்லையா? உமது நாமத்திலே மக்கள் பலருக்கு உதவிசெய்யவில்லையா?” என்று கூறும் யாரையேனும் கற்பனை செய்து கொள்வோம். இதைப்பற்றி நினைத்தல் என்னைப் பதட்டம் அடையச் செய்கிறது, ஆனால் ஒரு சுவிசேஷ ஊழியர் “கர்த்தாவே, இந்த ஆண்டுகள் எல்லாவற்றிலும் நான் உமக்காக உண்மையுடன் பிரசங்கிக்கவில்லையா? எண்ணற்ற வேதாகம வகுப்புகளை நடத்தவில்லையா? மதரீதியான பாடங்கள் பலவற்றை எழுதவில்லையா? இடர்ப்பாட்டில் இருந்த பல ஆத்துமாக்களுக்கு உமது நாமத்திலே ஆலோசனை கூறவில்லையா?” என்று கூறுவதைக் கூட என்னால் கற்பனை செய்ய முடிகிறது.[7] இந்த நடவடிக்கைகள் யாவையும் பாராட்டப்படத் தக்கவைகளே, ஆனால் இவைகளில் எதுவும், கர்த்தருடன் சரியான உறவுமுறையைக் கொண்டிருப்பதின் இடத்தை எடுத்துக்கொள்ள இயலாது.

காட்சியானது இந்தக் கவலையான, கவலையான, கவலையான, வசனத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது: “அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்” (வசனம் 23). “சொல்லுவேன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*homolegeo* என்ற) கிரேக்க வார்த்தை (மத்தேயு 10:32ல் உள்ளது போன்று) “அறிக்கைபண்ணுதல்” என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்படுகிற வார்த்தையாக உள்ளது.[8] “இந்த சந்தர்ப்பப் பொருளில் (இது) சட்டப்பூர்வமான அறிவித்தல் என்ற ஏற்படுத்துதலை அர்த்தப்படுத்துகிறது.”[9] இது நியாயத்தீர்ப்பின் அரியணையில் அமர்ந்திருக்கும்

ஒருவரின் உன்னதமான தீர்ப்பாக உள்ளது.

தீர்ப்பு என்னவாக இருந்தது? முதலாவது, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை." இது கர்த்தர், அவர்களின் இருப்பைப் பற்றி அறியவில்லை என்றோ அல்லது அவர்கள் என்ன செய்திருந்தனர் என்று அவர் அறியாதிருந்தார் என்றோ அர்த்தப்படுவதில்லை. வேதாகமத்தில் "அறிதல்" என்ற வார்த்தையானது அடிக்கடி ஒரு உறவைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டுள்ளது.[10] பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களினத்திடம் தேவன், "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்" என்று கூறினார் (ஆமோஸ் 3:2அ). புதிய ஏற்பாட்டில் பவுல், "தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்" (1 கொரிந்தியர் 8:3); "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19) என்று கூறினார். நியாயந்தீர்க்கப்படுபவர்கள் இயேசுவுக்கு உரியவர்கள் அல்ல, அவருடன் இரட்சிக்கும் உறவு கொண்டிருந்தவர்கள் அல்ல என்று இயேசு கூறினார். "நான் *ஒருக்காலும்* உங்களை அறியவில்லை" என்ற அவரது கூற்றானது, இவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதாக ஏறக்குறைய நிச்சயமாக நினைத்திருந்தாலும், இவர்கள் வசனத்தின் வேதாகமக் கருத்தில் ஒருக்காலும் கிறிஸ்தவர்கள் ஆகியிருந்ததில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கலாம்.

அடுத்ததாக இயேசு இருதயத்தைப் பிளக்கும் பின்வரும் வார்த்தைகளைப் பேசினார்: "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்."[11] நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசு தமது இடது புறத்தில் இருப்பவர்களைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்று கூறுவார் (மத்தேயு 25:41). பின்பு, "இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும்," "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி" செல்வார்கள் (மத்தேயு 25:46அ; 2 தெசலோனிக்கேயர் 1:9).

இந்தத் தனிநபர்களை "அக்கிரமச் செய்கைக்காரர்கள்" என்று இயேசு குறிப்பிட்டார்.[12] பிலிப்ஸ் அவர்களின் மொழிபெயர்ப்பில் "பிசாசின் பக்கமாகச் செயல்பட்டவர்களே!" என்றுள்ளது. இவர்கள் நாம் "கெட்டவர்கள்" என்று அழைக்கும் நபர்களாக இருக்கவில்லை. இவர்கள் தேவபக்தி உள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் தங்கள் மதரீதியான நடவடிக்கையில் உண்மையாகவும் மனச்சான்றின்படி செயல்படுபவர்களாகவும் இருந்தனர் என்பது தெளிவு. இவர்கள், தாங்கள் தேவனைச் சேவித்ததாக நினைத்தனர். பின்பு ஏன் இவர்கள் "அக்கிரமச் செய்கைக்காரரே" என்று குறிப்பிடப்பட்டனர்? ஒருவேளை அவர்கள், ஒருசில நல்ல செயல்களைச் செய்தலே தேவன் கேட்டுக் கொண்ட யாவுமாக இருந்தது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள், செயல்களை "கர்த்தருடைய நாமத்திலே" செய்தல் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக அறியப்பட்டிருக்க அவர்களைத் தகுதிப்படுத்தியது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள் நல்ல செயல்களைச் செய்தலானது பரலோகத்தில் தங்களுக்கு ஒரு இடத்தை ஏதோ ஒரு வகையில் ஈட்டியது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். இருப்பினும் அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவனுடைய சித்தத்தின்படி

செய்திருந்தது இல்லை என்று இயேசு தெளிவாக்கினார். ஏதோ ஒரு வகையில் அவர்கள், தேவனுடைய பிரமாணங்களுக்குப் பதிலாகத் தங்கள் சொந்த இருதயங்களின் கட்டளைகளைப் பின்பற்றி இருந்தனர். ஆகவே தேவனுடைய கண்களில் அவர்கள் "அக்கிரமக்கார" தனிநபர்களாக - அவரது பிரமாணத்தை எதிர்த்து நிற்கிற மக்களாக - இருந்தனர். கீழ்ப்படிதலுக்கு வார்த்தைகள் பதிலியாக இருப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன்.

என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். இயேசுவை கர்த்தரென்று அறிக்கையிடுதல் முக்கியமானதாக உள்ளது, அத்தியாவசியமானதாகக் கூட உள்ளது. பவுல், "... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று எழுதினார் (ரோமர் 10:9). இயேசு, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்" என்று கூறினார் (மத்தேயு 10:32). இருந்தபோதிலும், அறிக்கையிடுதலானது அவரது சித்தத்தைச் செய்ய ஒப்புக்கொடுத்தலினால் பலப்படுத்தப்படாதபோது, இயேசுவை "கர்த்தர்" என்று அழைத்தல் பயனற்றதாக உள்ளது. *உதடுகள்* மற்றும் *வாழ்க்கை* ஆகிய இரண்டுமே அவருக்கு அர்ப்பணிக்கப் பட்டிருக்க வேண்டும்.

## கேள்விப்படுதல் பதிலியல்ல (7:24-27)

**கொள்கை**

அடுத்ததாக இயேசு, வெறுமனே கேள்விப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை என்று அறிவித்தார். மலைப்பிரசங்கத்தின் நிறைவுப் பகுதியில் இயேசு, தமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள் மற்றும் அவற்றிற்குக் கீழ்ப்படியாதவர்கள் ஆகியோரைக் குறிப்பிட்டார். காலத்தின் புயல்களும் நித்தியத்துவமும் தாக்கும்போது, முதலாம் வகையினர் நிலைநிற்பார்கள் என்றும் இரண்டாம் வகையினர் அழிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுதல் முக்கியமானதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் மோசே மக்களிடத்தில், "இஸ்ரவேலே, கேள்!" என்று புத்தி கூறினார் (உபாகமம் 6:4). புதிய ஏற்பாட்டில் பின்வரும் புத்திமதி அடிக்கடி காணப்படுகிறது: "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 11:15; காண்க 13:9, 43; மாற்கு 4:9, 43; 7:16; லூக்கா 8:8; 14:35). பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறினார் (ரோமர் 10:17). இருப்பினும் தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுதல் மாத்திரமோ அல்லது அதைப் புரிந்து கொள்ளுதல் மாத்திரமோகூட போதுமானதாக இருப்பதில்லை. "விதைக்கிறவன் உவமையில்" (லூக்கா 8:4-15) கூறப்பட்ட நான்கு வகையான மக்களும் வசனத்தைக் கேள்விப்பட்டனர் (வசனங்கள் 12-15) - ஆனால் அந்த நான்கில் ஒரு வகையினர் மாத்திரமே தேவனுக்கென்று கனிகொடுத்தனர் (வசனங்கள் 8, 15).

நாம் கேள்விப்படுவதன்படி செயல்படாமல் கேள்விப்படுதல் என்பது பலன் தராததாக உள்ளது: அது எதையும் சாதிப்பதில்லை. அதைக் காட்டிலும் மிகமோசமாக, ஆவிக்குரிய விஷயங்களில் இது எதிர்விளைவை ஏற்படுத்தக்

கூடியதாக உள்ளது: இது ஆத்துமாவை அழிவுக்கு உட்படுத்தக் கூடும். ஜான் R. W. ஸ்டாட் அவர்கள், "வேதாகமம் வாசிக்க அபாயமான புத்தகமாக உள்ளது" என்று எழுதினார்;[13] மற்றும் A. T. ராபர்ட்ஸன் அவர்கள், "பிரசங்கங்களைக் கேட்டல் என்பது அபாயமான வேலையாக உள்ளது"[14] என்று கூறினார் - அதாவது நாம் வாசிக்கிற அல்லது கேட்கிற விஷயத்தைப் பற்றி ஒன்றும் செய்யாதிருக்கும்போது, அது அபாயமானதாக உள்ளது. நாம் கற்றுக்கொள்ளவும் அதன்படி செய்யவும் வேண்டும்.

### புத்தியாய் வீட்டைக் கட்டுபவர் (வசனங்கள் 24, 25)

வீடு கட்டும் இருவர் பற்றிய நன்கு அறியப்பட்ட உவமையைக் கொண்டு இயேசு தமது கருத்தை வலியுறுத்தினார். உலகமுழுவதிலும் பிள்ளைகள், "கற்பாறை மீது கட்டினவன் புத்தியுள்ளவன் ..." என்ற பாடலைப் பாடுகின்றனர். முதலாவதாக இயேசு புத்தியாய் வீட்டைக் கட்டுபவர் பற்றிப் பேசினார்: "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" (மத்தேயு 7:24). "புத்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*phronimos* என்ற) வார்த்தை "மதிநுட்பம், கூருணர்வு" என்று அர்த்தப்படுகிறது.[15]

"நான் சொல்லிய இந்த வார்த்தைகள்" என்பது மலைப்பிரசங்கத்தில் இயேசுவின் வார்த்தைகளைத் திட்டவட்டமாகக் குறிக்கிறது, ஆனால் அவர் பேசிய எல்லா வார்த்தைகளுக்கும் இதன் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். யூத அதிகாரிகளிடத்தில் அவர், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்று கூறினார் (யோவான் 12:48). அவரது ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்கள் பின்னாளில் பேசிய வார்த்தைகளுக்கும் நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்படமுடியும். இயேசுவின் மரணத்திற்கு முன்பாக அவர் தமது அப்போஸ்தலர்களிடம், தாம் பரிசுத்த ஆவியை அனுப்புவதாகக் கூறினார் (யோவான் 14:16, 17), அவர் (பரிசுத்த ஆவியானவர்) தாம் அவர்களுக்குப் போதித்திருந்த யாவற்றையும் நினைவூட்டுவார் (வசனம் 26) என்றும் அவர் கூறினார். புதிய ஏற்பாடு முழுவதும் "இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு" என்று அறியப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டு உள்ளவற்றின்படி செயல்படுதலானது கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி செயல்படுவதாக உள்ளது. அதைச் செய்பவர்கள் தமது வீட்டைக் கன்மலையின் மேல் கட்டிய புத்தியுள்ள மனிதருக்கு ஒப்பிடப்பட முடியும்.

அதன் அஸ்திபாரத்தைக் காட்டிலும் அதிக பலமான கட்டுமானம் வேறு எதுவும் இருப்பதில்லை. பலஸ்தீனத்தின் கரடு முரடான எல்லைப்பகுதியில் கனத்த பாறை அமைப்புகள் பல உள்ளன, எனவே கட்டிடம் கட்டுவதற்கு ஒரு பாறையைக் கண்டறிதல் என்பது கடினமாக இருந்திருக்காது. தகுதியான பாறை அஸ்திபாரம் மேற்பரப்பில் தயாராகக் காணப்படவில்லை என்றால், தோண்டும்போது ஒருவர் அதைக் கண்டறிய முடியும். சமனான வெளியில் செய்த பிரசங்கத்தில் இயேசு, தமது வார்த்தைகளின்படி செயல்படுகிற மனிதர் "ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற

*மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்" (லூக்கா 6:48அ) என்று கூறினார்.*

*தொடர்ந்து இயேசு, "பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை" (மத்தேயு 7:25அ) என்று கூறினார். அந்த வீடானது, மேலிருந்து பொழிந்த மழையினாலும், கீழிருந்து புறப்பட்ட வெள்ளத்தினாலும் பக்கங்களில் இருந்து வீசிய காற்றினாலும் தாக்கப்பட்டது. பலஸ்தீனத்தின் எல்லைப் பகுதியைப் பற்றிச் சிலவற்றை அறிதல் என்பது, இந்த உருவகத்தைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும். அந்த நாடானது ஆண்டின் பெரும்பான்மையான காலத்தில் வறட்சியாக இருந்தது மற்றும் ஆழ்ந்து குறுகிய பள்ளத்தாக்குகள் பலவற்றைக் கொண்டிருந்தது, அவற்றில் சில மணற்பாங்கான அடிப்பகுதியைக் கொண்டிருந்தன. மழைக் காலங்களில், தண்ணீர் வெள்ளமானது தனது பாதையில் உள்ள இந்தப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் எல்லாவற்றையும் அடித்துச் சென்றுவிடும்.[16] இயேசுவின் செய்தியை மதித்து உணருவதற்குக் காட்சியின் கொந்தளிப்பைத் தரிசிக்க முயற்சி செய்யுங்கள்: மழை கீழிறங்கி வருகிறது, காற்று பெருங்கூச்சலிட்டு அடிக்கிறது மற்றும் நீரலைகள் அந்த வீட்டிற்கு எதிராக மோதியடிக்கிறது![17]*

*"ஒரு நிமிடம் பொறுங்கள்!" என்று யாரேனும் ஒருவர் மறுப்புரை தெரிவிக்கலாம். "இவர் புத்தியுள்ள கட்டும் மனிதராக உள்ளார். இவர் கேட்டு கீழ்ப்படிகிறவராக இருக்கிறார். நிச்சயமாகவே, ஞானமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் மதியீனமும் கீழ்ப்படியாமையும் உள்ளவர்களைப் போன்று புயலுக்கு ஆளாவதில்லை!" என்று அவர்கள் கூறலாம். ஆம், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களும் அவரைப் பின்பற்ற மறுக்கிறவர்கள் போன்றே புயல் நிறைந்த சூழ்நிலையைக் கொண்டுள்ளனர்.*

*இந்த உலகத்தின் புயல்கள் உள்ளன. நமது வாழ்வானது சுகவீனம், ஏமாற்றங்கள், துக்கம், காட்டிக்கொடுக்கப்படுதல் மற்றும் துன்புறுத்தப்படுதல் போன்றவற்றினால் மோதியடிக்கப்படக்கூடும். முதிர் வயது மற்றும் மரணம் அணுகுதல் ஆகியவை நம்மை மூழ்கடிப்பதாக அறைகூவல் விடக்கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உலகத்திற்கு அப்பால் நியாயத்தீர்ப்பின் நாளில் சோதனை வேளையின் மாபெரும் விளைவு உள்ளது. உடனடியாகத் தொடர்ந்து வரும் (வசனங்கள் 22, 23) வசனங்களின் வெளிச்சத்தில், இதுவே அனேகமாக இயேசுவின் சிந்தையில் மிகமேலாக இருந்திருக்க வேண்டும். வேதாகமம் பின்வருமாறு போதிக்கிறது ...*

> *ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12).*
>
> *ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (2 கொரிந்தியர் 5:10).*
>
> *அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9:27).*

*புத்தியுள்ள மனிதரின் வீடு மழை, வெள்ளங்கள் மற்றும் காற்று ஆகியவற்றினால் தாக்கப்பட்ட போது அதற்கு என்ன நேர்ந்தது? "... அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம்*

போடப்பட்டிருந்தது" (மத்தேயு 7:25ஆ). அது திடமான அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டு இருந்த காரணத்தினால் நிலைநின்றது. நமது வாழ்வும்கூட திடமான பாறையின்மீது கட்டப்பட்டிருக்க வேண்டும் (காண்க 1 யோவான் 2:17).

புத்தியுள்ள மனிதர் "*a* rock" மீதல்ல ஆனால் "*the* rock" மீது கட்டினார் என்று இயேசு கூறினார் என்பது கவனிக்கப் பட்டுள்ளது[18] (வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). ஒருவேளை அவர் தம்மைக் குறித்த "பாறை" என்ற மறைமுகமான குறிப்புரையை ஏற்படுத்தி இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 3:11). விஷயம் அப்படி இருந்தாலும்கூட,[19] அவரது வலியுறுத்தம் பாறை என்பதன் மீதானதல்ல, ஆனால் பாறையின் மீது ஒருவர் - இயேசு கூறுவதைக் கவனித்தலினாலும் பின்பு அவர் கூறுகிறபடி செய்கிறதினாலும் - எவ்வாறு கட்டுகிறார் என்பதன் மீதே இருந்தது. இயேசு தமது வசனத்தில் என்ன கூறுகிறார் என்பதை அறிந்தால் மாத்திரம் போதாது; அவர் கூறுகிறபடி நாம் செய்ய வேண்டும். அவரது போதனையைப் பாராட்டினால் மாத்திரம் போதாது; அதன்மீது நாம் செயல்பட வேண்டும். இயேசு கூறினவற்றை போதிப்பது மற்றும் பிரசங்கிப்பது கூட போதாது. பிரசங்கித்தல் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், அது நடைமுறையின் இடத்தை ஒருக்காலும் எடுத்துக்கொள்ள முடியாது. நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறுதான் நாம் அவரது வார்த்தைகளை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் அவற்றை மதித்துணரவும் முடியும், மற்றும் அவ்வாறுதான் நாம் அவரைப் பிரியப்படுத்த முடியும்.

வீடுகட்டும் இவ்விருவர் பற்றி குழந்தைகளின் பாடல் ஒன்றில் முடிவு சரணம் பின்வருமாறு உள்ளது:

ஆகவே
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது
உங்கள் வீட்டைக் கட்டுங்கள் ...
ஆசீர்வாதங்கள் கீழிறங்கி வருமே.
ஜெபங்கள் மேலே எழும்புவதைப் போன்றே
ஆசீர்வாதங்கள் கீழிறிங்கி வருமே ...[20]

பிள்ளைகளுடன் நான் இதைப் பாடுகையில், வீடுகட்டும் இருவரைப்பற்றி இயேசு என்ன கூறினார் என்பதை நான் விளக்கப்படுத்தி பின்பு பின்வரும் புதிய வார்த்தைகளைப் பாடும்படி பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுவேன்:

ஆகவே
ஆண்டவருடைய வார்த்தை மீது
உங்கள் வாழ்வைக் கட்டுங்கள் ...
ஆசீர்வாதங்கள் கீழிறங்கி வருமே
அவரது சித்தத்தின்படி நாம் செய்கிறபோது
ஆசீர்வாதங்கள் கீழிறிங்கி வருமே ...[21]

**புத்தியில்லாமல் வீட்டைக் கட்டுபவர் (வசனங்கள் 26, 27)**

26ம் வசனத்தில் இயேசு தமது கவனத்தை, புத்தியில்லாமல் வீட்டைக் கட்டுபவர் மீது திரும்பினார்: "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு,

*இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்'' (வசனம் 26). "புத்தியில்லாத" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (moros என்ற) வார்த்தையில் இருந்தே நாம் ''*moron*'' ["வயதிற்குத் தக்க அறிவில்லாதவர்"] என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இது, "மந்தமான, சோம்பலான ... மதியீனமான, அறிவற்ற" என்று அர்த்தப்படுகிறது.[22]*

*வீடுகட்டுதல் பற்றிய ஒப்புவமையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, கட்டிடத்தின் வகை அல்லது கட்டுதலில் பயன்படும் பொருள் பற்றிப் பேச நாம் சோதிக்கப்படலாம் (காண்க 1 கொரிந்தியர் 3:12, 13). இருப்பினும் இயேசுவின் விவரிப்பில், அஸ்திபாரம் மாத்திரமே இரு வீடுகளுக்கும் இடையிலான ஒரே வேறுபாடாக உள்ளது. இரு வீடுகளும் ஒரே விதமான தரைத் திட்ட அமைப்பைக் கொண்டிருக்க முடியும். அவற்றின் கட்டுமானத்தில் ஒரே விதமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். காண்போருக்கு அவை ஒரே விதமாகவே காட்சியளித்திருக்கும். அவைகள் ஒரே இட அமைப்பில் இருந்தன என்பதும் தெளிவு, ஏனெனில் ஒரு வீட்டைத் தாக்கிய அதே புயல் இன்னொன்றையும் தாக்கியது. அஸ்திபாரம் மாத்திரமே ஒரே வேறுபாடாக இருந்தது. புத்தியுள்ள மனிதர் பாறையின் மீது கட்டிய வேளையில் புத்தியில்லாத மனிதர் மணலின் மீது கட்டினார்.*

*மதநம்பிக்கையற்றவர்கள், ''ஆனால் ஒரு வீட்டை மணலின் மீது கட்டுமளவுக்கு எவரொருவரும் புத்தியில்லாதவராக இருக்கமாட்டார்'' என்று வலியுறுத்தலாம். உண்மையில் பல வீட்டு அமைப்புகள் திடமற்ற அடிப்படையின்மீது கட்டப்பட்டுள்ளன. தரையின்மீது கட்டப்பட்டு கரளைக் கற்களால் நிரப்பப்பட்ட பீசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் குறிப்பிடத்தக்க உதாரணமாக உள்ளது.[23] விரைவிலேயே அந்தக் கோபுரம் சாயத் தொடங்கிற்று. இன்றைய நாட்களில் அந்தக் கோபுரம் வீழ்ந்து விடாதிருக்கப் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையில் வீடு கட்டுபவர்களை இயேசு தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. அவர் வீடுகளைத் கட்டுதல் பற்றியல்ல ஆனால் வாழ்வைக் கட்டுதல் பற்றி அக்கறை உடையவராக இருந்தார். ஒவ்வொருநாளும் திரளான ஜனக்கூட்டங்கள் தங்கள் எண்ணப்போக்கு மற்றும் செயல் ஆகியவற்றில் புத்தியில்லாத வகையில் வீடுகட்டுபவர்களாக முயற்சி மேற்கொள்கின்றனர். மக்கள் தக்கவகையிலான தயாரித்தல் இன்றி அவசரமாகத் திருமணம் செய்கின்றனர். மக்கள் கவனமாக கூர்ந்தாய்வு செய்யாமலேயே நிதிநிலை ஏற்பாடுகளில் துரிசமாய்ச் செயல்படுகின்றனர். துரதிர்ஷ்டவசமாக, மத விஷயத்தைப் பொறுத்தமட்டிலும்கூட இது உண்மையாக உள்ளது. பலர் தங்கள் வாழ்வைக் காலங்கள் தோறும் நிலைத்து நிற்கும் பாறையின்மீது உறுதியாய் நிலைநாட்ட நேரத்தையும் முயற்சியையும் எடுத்துக் கொள்ளாமல் உடனடியாக ஆவிக்குரிய நிறைவை விரும்புகின்றனர்.*

*புத்தியில்லாத மனிதர் உறுதியான அஸ்திபாரத்தைப் பற்றிக் கவலைப்படாது இருந்ததால், அவரது வீடானது அனேகமாக புத்தியுள்ள மனிதரின் வீட்டைவிட அதிக விரைவாகக் கட்டப்பட்டு இருக்கும். அவர் தமது புதிய வீட்டினுள் தமது குடும்பத்துடன் குடியேறுகையில், பின்வருமாறு பெருமிதம் கொள்வதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: வீடு கட்டும் மற்றவரிடத்தில் அவர், "ஆ, ஆ, நான் எனது வீட்டை பாதிக்காலத்திலேயே கட்டிவிட்டேன்!''*

இருப்பினும் பின்பு, "பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது" (மத்தேயு 7:27).[24] ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், இந்த இடிதலானது அடிக்கடி, வாழ்வின் புயல்கள் தாக்கும்போது தொடங்குகிறது; ஆனால் முற்றிலுமான இடிதலானது நியாயத்தீர்ப்பின் நாளில் காணப்படும். சிலர் தங்களை இந்த வாழ்வின் இயற்பியல்ரீதியான புயல்களில் இருந்து பாதுகாப்பதற்கு விரிவான பாதுகாப்பு இல்லங்களைக் கட்டி எழுப்பியுள்ளனர்; ஆனால் கடைசிநாளில், மனிதரால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு பாதுகாப்பும் புறம்பே உரியப்படும். தேவனுடைய வல்லமையுள்ள அரியணைக்கு முன்பாக, யாவரும் புகலற்ற நிலையில் நிற்போம். பின்பு ஆயத்தமாயிராதவர்கள் விழுந்து போவார்கள், அவர்களின் வீழ்ச்சி பெரிதாக இருக்கும். இவ்விடத்தில் இயேசு தமது எஜமானத்துவம் நிறைந்த பிரசங்கத்தை - வெற்றுரையுடன் அல்ல, ஆனால் எதிரொலிக்கும் வீழ்ச்சியுடன் - முடித்தார்!

இயேசுவின் செய்தியில் தவறான புரிந்துகொள்ளுதல் எதுவும் இருப்பதில்லை: அவரது சித்தத்தைக் கேள்விப்பட்டு கற்றுக்கொள்ளுதல் மாத்திரம் போதுமானதல்ல; நாம் செய்யும்படி அவர் கூறியுள்ளது எதுவோ அதை நாம் *செய்ய வேண்டும்*. போல்ஸ் அவர்கள், "*கேள்விப்பட்டு* அதன்படி *செய்யாதிருத்தல்* என்பது பயனற்றதைவிட மிகமோசமானதாக உள்ளது; அப்படிப்பட்ட கேள்விப்படுதல் குற்ற உணர்வை மோசமான வகையில் அதிகப்படுத்துவதை மாத்திரமே செய்யும்; தமது கடமையைப் பற்றி ஒருவர் எவ்வளவு அதிகம் கேள்விப்படுகிறாரோ, அவர் அதற்குக் கீழ்ப்படியாதிருந்தால், அவ்வளவுக்கு அதிகம் குற்ற உணர்வுகொள்கிறார்" என்று எழுதினார்[25] (காண்க யாக்கோபு 4:17). இது, நாம் பூரணமாகக் கீழ்ப்படியக் கூடியவர்களாக இருக்கிறோம் என்று அர்த்தப்படுத்துவதில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன், ஆனால் நம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகத் தேவனுடைய சித்தத்தைச் *செய்தல்* என்பது நமது இருதயங்களின் நோக்கமாகவும் விருப்பமாகவும் இருக்க வேண்டும். கேள்விப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை.

## முடிவுரை

மலைப்பிரசங்கத்தின் மீதான நமது படிப்பின் முடிவிற்கு நாம் வந்திருக்கிறோம். இந்தப் பிரசங்கத்தைப் பற்றி ஆல்பர்ட் பேர்னெஸ் அவர்கள், "தூய்மை, சத்தியம் மற்றும் வனப்பு மற்றும் மேன்மை ஆகியவற்றில் [மலைப்பிரசங்கத்துடன்] ஒப்பீடு செய்வதற்கு எல்லா மொழிகளிலும் ஒரு உரையும் காணப்படுவதில்லை" என்று எழுதினார்.[26] நாம் ஒன்றுகூடிச் செலவிட்ட நேரம், உங்களை அந்த மதிப்பீட்டை இன்னும் அதிகமாக ஒப்புக்கொள்ளச் சாயும்படி செய்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பிரசங்கத்தை முதன் முதலாகக் கேட்டவர்கள் மீது இது கொண்டிருந்த செயல்விளைவு என்ன? மத்தேயு, இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது,[27] "... ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று எழுதினார் (மத்தேயு 7:28). இயேசு தம் வார்த்தைகளை, தம் சீஷர்களை நோக்கி குறிப்பிட்டுச் சொன்னார் (காண்க 5:1, 2), இவர்கள் ஏற்கெனவே அவரைப் பின்பற்ற ஒப்புக்கொடுத்திருந்தனர்;

ஆனால் அவரை சூழ்ந்து கொண்ட "கூட்டத்தாரும்" (காண்க 4:25; 5:1; 7:28) அவருடைய வார்த்தைகளைக் கேட்டனர் என்பது தெளிவு. இவர்கள் அவரது போதகத்தைக் குறித்து "ஆச்சரியப்பட்டனர்." "ஆச்சரியப்பட்டார்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (*ekplesso* என்ற) கிரேக்க வார்த்தை ஒரு பலமான வார்த்தையாக உள்ளது. இது, "ஒருவர் தமது உணர்வுகள் அற்றுப்போகும்படி தாக்கப்படுதல்,"[28] "பேச்சற்றுப் போகுதல்,"[29] "திகைத்துப் போயிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.

ஜனங்கள் இயேசுவின் போதகத்தைக் குறித்து இவ்வளவாக ஆச்சரியப்பட்டது ஏன்? "அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய்[30] அவர்களுக்குப் போதித்தபடியால்" (7:29) அவர்கள் ஆச்சரியப்பட்டனர். "வேதபாரகர்கள் நியாயப்பிரமாணத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்து, பிரதியெடுத்து விளக்கியுரைத்த கற்றறிந்த மனிதர்களாக இருந்தனர்."[31] அவர்களின் போதகத்தில் முடிவற்ற அதிகாரத்துவங்களை அவர்கள் மேற்கோள் காண்பித்தனர்: "அ என்ற ரபீ, ஆ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார், ஆ என்ற ரபீ, இ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார், இ என்ற ரபீ, ஈ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார்" மற்றும் இது மென்மேலும் தொடரப்பட்டது.[32] இந்த உரையாடல்களின் மாதிரிகள் யூதர்களின் தல்மூத் என்ற புத்தகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன. இவற்றை "மனிதகுலத்தின் வரலாற்றில் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு பிரச்சனையின் மீதான, தொடர்பற்ற விளக்கங்களின் மிக உலர்ந்த, மிக சலிப்பான தொகுப்பு" என்று ராபர்ட்ஸன் அவர்கள் அழைத்தார்.[33]

வேதபாரகர்களுக்கு நேர்மாறாக, இயேசு "அதிகாரமுடையவராய்" பேசினார் (காண்க மத்தேயு 28:18). வேதபாரகர்கள் "அதிகாரத்தின் *மூலம்*" பேசிய வேளையில் இயேசு "அதி*காரத்துடன்*" பேசினார்.[34] வேதபாரகர்கள், "இந்த ரபீ இவ்வாறு சொன்னார்" என்று கூறிய வேளையில், இயேசு "*நான்* உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:18, 20, 22). "இயேசு தமது வார்த்தைகளுக்குச் சுயமாக அதிகாரத்துவப்படுத்தும் தொனியைக் கொண்டிருந்தார்."[35]

சிலர், மலைப்பிரசங்கத்தின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்கின்றனர், ஆனால் மலையில் பேசியவரது மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளத் தவறுகின்றனர். பிரசங்கத்தின் மாபெரும் தன்மை என்பது அந்தப் பிரசங்கத்தை உரைப்பவரின் மாபெரும் தன்மையின் மீது அமைந்துள்ளது. மீண்டும் சிலர், "... மலையின் மீதிருந்த இரட்சகரைப் பிரிந்து மலைப்பிரசங்கம் தனியே ஜீவிக்க இயலாது"[36] என்பதை உணர்ந்து அறியாமலேயே, மலைப்பிரசங்கத்தின் உயர்ந்த தரநிலையைப் பாராட்டுகின்றனர். இயேசுவின் மூலமாக நாம் உள்ளான பலத்தைப் பெறுகிறோம் (காண்க யோவான் 16:33; 1 யோவான் 5:4). நாம் குறைவுபடும்போது இயேசுவின் மூலமாக நாம் மன்னிக்கப்படுகிறோம் (காண்க எபேசியர் 1:7).

ஆகவே நாம் நமது பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், மலையின் மீது பிரசங்கித்தவரை நோக்கி நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். ஜனக்கூட்டம் அவரது போதனையைப் பார்த்து வியந்து திகைத்தது. நீங்கள் வியந்து திகைத்திருக்கிறீர்களா? அவர் போதித்ததை ஜனக்கூட்டம் கேட்ட போது அவர்கள் அவரைப் பின்பற்றினர். உங்களைப் பற்றிய விஷயம் என்ன? அவரது

*மாபெரும் பிரசங்கத்தைப் படித்துள்ள நிலையில், நீங்கள் அவரைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? அவரது சித்தத்தின்படி செய்ய உங்களையே ஒப்புக்கொடுக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிபவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப் படுவார்கள். அவரது வார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செய்கிறவர்கள் மாத்திரமே இந்த வாழ்விலும் இதற்குப்பின்வரும் வாழ்விலும் ஏற்படும் புயல்களில் நிலைத்து நிற்பார்கள்.*

## *நிறைவாக ஒரு வார்த்தை: மலையின் மீது பேசியவர்*

*இந்தப் பாடத்தில் நான், மலைப்பிரசங்கத்தின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொண்டு, ஆனால் மலையின் மீது பேசியவரின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இயேசு யாராக இருந்தார் என்பதற்கான உள்மறைக் குறிப்புகளைக் காண்பதற்குப் பிரசங்கம் முழுவதையும் பார்வையிடுங்கள். பாக்கியங்களில் இயேசு, "<u>என்னிமித்தம்</u> உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 5:11, 12அ; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). <u>இயேசுவின் நாமத்தினிமித்தம்</u> துன்புறுத்தப்படுபவர்கள் பரலோகம் செல்வார்கள் என்பது வாக்குத்தத்தமாக உள்ளது! மேலும் 5ம் அதிகாரத்தில், நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் "நிறைவேற்றவே" இயேசு வந்தார் என்ற அவரது கூற்று உள்ளது (வசனம் 17). மேசியா மாத்திரமே அதைச் செய்ய முடியும். எனவே அவர், "... என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். <u>நான்</u> உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." (வசனங்கள் 27, 28அ; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது; காண்க வசனங்கள் 21, 22, 31-34, 38-44) என்று கூறுகையில் அவரது அதிகாரத்துவமான குரலைக் கவனியுங்கள்.*

*இயேசுவின் மேசியாத்துவம் மற்றும் தெய்வீகத்துவம் ஆகியவற்றிற்கு உள்மறைந்துள்ள உரிமைகோருதல்கள் பற்றி நாம், இந்தப் பாடத்திற்கான வசனம் தவிர வேறு எங்கும் தேட வேண்டியதில்லை. 7:22, 23ல் இயேசு, கடைசிநாளில் <u>தாம்</u> நியாயாசனத்தில் அமரப்போவதாகச் சுட்டிக்காண்பித்தார். மீண்டுமாக 24 மற்றும் 26ம் வசனங்களில் இயேசு தேவனுடைய சித்தத்தைத் தமது சொந்த வார்த்தைகளுடன் சமப்படுத்தினார். இயேசு தெய்வீகத்துவத்தை உரிமைகோரினார்.*

*மதநம்பிக்கை அற்ற ஒருவர், "ஒருவேளை இயேசு தாம் தெய்வீகமானவர் என்று, தேவனுடைய தனித்துவமான குமாரன் என்று நம்பியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்தார் என்றால், அது அவர் எவ்வளவு ஏமாற்றுபவராகவும் பைத்தியக்காரராகவும் இருந்தார் என்பதையே காண்பிக்கிறது" என்று பதில் அளிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அவ்வகையான சிந்தித்தலுக்கு ஜான் ஸ்டாட் அவர்கள் எவ்வாறு பதில் அளித்தார் என்பது இங்கு தரப்படுகிறது: "மலைப்பிரசங்கத்தின் மிக உயர்வான ஒழுக்கநெறிகள், பைத்தியக்கார மனதின் உற்பத்தியாக உள்ளன என்ற கருத்தை உண்மையிலேயே தீவிரமாகப் பராமரிக்க முடியுமா? அந்த முடிவை அடைவதற்கு பாவ இயல்பின் மிக உயர்வான அளவு தேவைப்படுகிறது."[37]*

*நீங்கள் மலைப்பிரசங்கத்தை, அதைப் பிரசங்கித்தவருக்கு உங்களை ஒப்புக்கொடுக்காமல் படித்தீர்கள் என்றால், நீங்கள் அந்த உரையின் மிகமுக்கியமான அம்சத்தைத் தவறவிட்டிருக்கிறீர்கள் என்றாகிறது. அந்த பிரசங்கத்திற்கு அர்த்தம் கொடுப்பவர் இயேசுவே. அந்தப் பிரசங்கத்திற்கு அதிகாரத்துவம் கொடுப்பவர் இயேசுவே. "தேவன் அருளிய (இயேசு என்ற) சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரிந்தியர் 9:15)!*

---

குறிப்புகள்

[1]*இந்தப் புத்தகத்தில் முன்னதாக உள்ள "இவ்வாறு ஜெபியுங்கள்" என்ற பாடத்தில் இந்தக் கருத்தின் மீதான கலந்துரையாடலைக் காணவும்.* [2]*இந்த இடத்தில் நீங்கள், ஒரு தனிநபர் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதற்கு அவர் செய்ய வேண்டியவை யாவை என்பதைக் குறிப்பிட முடியும் (காண்க நடபடிகள் 2:36-38, 41, 47).* [3]*Kurios என்பது பலவகை அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்; ஆனால் 21 மற்றும் 22ம் வசனங்களில் சந்தர்ப்பப் பொருளானது, இது தெய்வீக இயற்பெயரை நோக்கங் கொண்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிறது.* [4]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 268. [5]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 261. [6]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1976), 181. [7]*நியாயத்தீர்ப்பின் நாளானது பெருமை பாராட்டும் நாளாக இருக்கப் போவதில்லை, ஆனால் அது நம்மைத் தேவனுடைய இரக்கத்தை நோக்கி வீசும் நாளாகவும் தேவனுடைய அன்பின் கொடைக்காக அவரைத் துதிக்கும் நாளாகவும் இருக்கும்.* [8]*Homolegeo என்பது "ஒரே விஷயத்தைப் பேச" என்ற நேரடி அர்த்தம் கொண்ட கூட்டுவார்த்தையாகும் (lego* ["பேச"] *மற்றும் homos* ["ஒரே"]*)* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 120). [9]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 71. [10]Vine, 346.

[11]*சங்கீதம் 6:8ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [12]*''அக்கிரமச்செய்கை'' என்பது* (*anomia*) *nomos* [*''பிரமாணம்''*] *என்பதை* a *என்ற முன்னிடைச் சொல் கொண்டு எதிர்ப்பதமாக்கிய வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.* KJV *வேதாகமத்தில்* ''iniquity'' *என்றுள்ளது.* [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 210. [14]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1 (Nashville: Broadman Press, 1930), 63. [15]Vine, 679. [16]*பலஸ்தீனத்தின் இந்த அமைப்பைப் பற்றி நான் வாசிக்கையில், டென்னிஸ் சிம்மன்ஸ் அவர்கள் ஆஸ்திரேலியாவில் எங்களை அழைத்துச் சென்ற ஒரு முகாம் சிற்றுலா என் நினைவுக்கு வருகிறது. நாங்கள் மலைக்கணவாயின் அடிப்பகுதியில் இருந்த ஒரு செங்குத்தான கரைப்பகுதிக்குக் கீழிறங்கிச் சென்று ஒரு சிறிய நீரோடையின் அருகில் முகாமிட்டோம். அங்கு மலைக்கணவாயில் வளர்ந்திருந்த மரங்களின் மேலிருந்த குப்பைகளைக் கவனித்த நான், அதைப்பற்றி டென்னிஸிடம் கேட்டேன். "அது மழை பெய்யும்போது தண்ணீர் எவ்வளவு உயரத்திற்கு வருகிறது என்பதைக் காட்டுகிறது" என்று அவர் கூறினார். அன்றைய இரவு வேளையின் பெரும்பான்மையான பகுதியில் நான் இடிமுழக்கத்தின் சத்தத்திற்காக விழித்திருந்தேன்.* [17]*"புத்தியுடன் வீட்டைக் கட்டுபவர் வெள்ளத்தினால் இவ்வளவு பாதிக்கப்படக்கூடிய இடத்தைத் தெரிவு*

*செய்யக் குறைவான தொலைநோக்குடையவராக இருந்தாரா என்பது இவ்விடத்தில் வருவதில்லை, ஏனென்றால் இயேசுவின் உவமையின் உண்மை வாழ்விற்கான நடைமுறைப் பயன்பாட்டில், நாம் நமது பண்பை எவ்விடத்தில் மேம்படுத்தலாம் என்பதற்கும், சோதனை மற்றும் இடர்ப்பாடுகள் என்ற நித்தியத்திற்கும் நம்மை அச்சுறுத்தும் விஷயங்களில் இருந்து பாதுகாக்கப் பட்டுள்ளது என்பதற்கும் இடமில்லை"* (Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series [Joplin, Mo.: College Press, 1968], 437). [18]KJV *வேதாகமத்தில்* "a rock" *என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில்* "rock" *என்ற வார்த்தைக்கு முன்னால் (*"the" *என்ற) திட்டவட்டச் சூட்டுச்சொல் உள்ளது.* [19]*விஷயம் அப்படி இருக்காது. 26ம் வசனத்தின் "மணல்" என்பதற்கு முன்பாகவும் திட்டவட்டச் சுட்டுச்சொல் காணப்படுகிறது, மற்றும் அந்தக் குறிப்பில் திட்டவட்டச் சுட்டுச்சொல்லுக்கு விசேஷித்த தனிச்சிறப்பு எதுவும் இருப்பதாகக் காணப்படவில்லை.* [20]Unknown, "The Wise Man Built His House upon the Rock"; http//www.ebibleteacher. com/ children/songs.htm#Wise%20Man; Internet; accessed 10 July 2008.

[21]*இந்தப் புதிய வார்த்தைகளுடன் புதிய கை அசைவுகளையும் நான் கற்றுக்கொடுக்கிறேன். "ஆண்டவருடைய வார்த்தை" என்பதைப் பாடும்போது நாங்கள் எங்கள் கைகளைத் திறந்து வைக்கப்பட்ட வேதாகமம் போன்று பிடித்துக்கொள்வோம். "அவரது சித்தத்தின்படி நாம் செய்கிறபோது" என்பதைப் பாடும்போது நாங்கள் ஒரு விரலினால் மேல்நோக்கிச் சுட்டிக்காண்பிப்போம்.* [22]Vine, 246. [23]Dick Marcear, "What Are You Building On?" *Stafford Standard,* weekly bulletin of Stafford church of Christ, Stafford, Texas (29 January 1985). [24]*நீதிமொழிகள் 10:25ஐ ஒப்பிடவும்.* [25]Boles, 184. [26]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 82. [27]*"இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" என்பது, இந்தப் பிரசங்கம் இயேசுவின் போதனைகளின் தொகுப்பாக இருந்தது என்பதற்கு மாறாக ஒரே தனி எடுத்துரைப்பாக இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [28]Mounce, 71. *Ekplesso* is a compound word: *ek* ("out of") plus *plesso* ("to strike") (Vine, 25). [29]Lenski has "dumbfounded" (R. C. H. Lenski, *The Interpretation of St. Matthew's Gospel* [Minneapolis, Minn.: Augsburg Publishing House, 1943], 314). [30]*"அதிகாரம்" என்பது exousia என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

[31]McGarvey, 166. [32]McGarvey, 167 *ல் இதற்கு ஒரு உதாரணம் உள்ளது.* [33]Robertson, 63. [34]A. B. Bruce, "Commentary on the Synoptic Gospels," *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (London: Hodder, 1897), 136. [35]Mounce, 70. [36]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 296. [37]Stott, 222.